# நகர நிர்வாகமானது, குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்கள் வரி கட்டுவதை ஆகஸ்ட் 19 ஆம் தேதி வரை தள்ளி வைப்பதுடன் அனைத்து வகை அபராதங்களில் இருந்து விலக்கும் அளிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே 4, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் தனது குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களுக்கு வரி கட்டுவதை மார்ச் 18 லிருந்து ஆகஸ்ட் 19 வரையிலான ஐந்துமாத காலத்திற்கு தள்ளி போட்டிருப்பதுடன் வட்டியோ அல்லது தாமதமாக செலுத்துவதற்கான கட்டணமோ இல்லாமல் சலுகை செய்திருக்கிறது. இந்த சலுகையானது ஜனவரி மாதத்தில் அனுப்பப்பட்ட இடைக்கால வரிகேட்பு ரசீதுக்கானது.

இப்படி தள்ளி வைக்கும் திட்டமானது மார்ச் 21 ஆம் தேதியன்று கோவிட்-19 தொற்று பரவலின் பேரில் அறிமுகம் செய்யப்பட்டது.

வரி செலுத்துவதற்காக முன்கூட்டியே அங்கீகாரம் அளித்து அதை ரத்து செய்ய விரும்பும் எவர் ஒருவரும் நகர நிர்வாகத்தினை இதுவரை தொடர்புகொள்ள வில்லையானால், மே மற்றும் ஜூன் மாத தவணைகளுக்கு இப்படியான ரத்து செய்ய விரும்புவதற்காக, நகர நிர்வாகத்தின் வலைத்தளத்தில் இருக்கின்ற ஆன் லைன் படிவத்தின் (online form) மூலமாக வேண்டுகாள் வைக்கலாம். பின்னொரு சமயத்தில் வரித்தொகை செலுத்த முன் அங்கீகாரம் அளிக்கப்படுவதற்கு , நகர நிர்வாகத்திடம் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

அடமானம் வைத்ததன் ஒரு பாகமாக வரி கட்டியவர்கள், தங்களுக்கு அடமானத்தொகை கொடுத்தவர்களைத் தொடர்புகொண்டு, தாங்கள் கட்டிய வரித்தொகையை ரத்து செய்துகொள்ளலாமா என தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அடமானத்தொகை வழங்குபவர் நகர நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு இப்படியான குடியிருப்பு அல்லது வணிக கட்டிடத்தினை நிர்வாகத்தின் பட்டியலில் இருந்து நீக்கச் சொல்ல வேண்டும்.

வரி தேதி தள்ளி வைப்பு என்பதற்கு வரி தள்ளுபடி என்று அர்த்தமில்லை. தேதி தள்ளி வரி செலுத்த வேண்டிய தொகையானது சற்று தாமதமாக ஆனால் ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் நகர நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டும்; இதனால், ஆகஸ்ட் 19 க்குப் பிறகான தாமத கட்டணம் மற்றும் காலம் தாண்டி பனம் செலுத்துவதினால் உண்டாகும் வட்டி ஆகியவற்றைத் தவிர்க்க முடியும். வரி செலுத்துவோர், தாங்கள் செலுத்த வேண்டிய வரித்தொகையை அல்லது தவணை தாண்டிய தொகையை சிறு சிறு தொகைகளாகவோ ஒரே முழுத் தொகையாகவோ கடைசி தேதியாகிய ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் செலுத்திக் கொள்ளலாம்.

ஜூலை மாத ஆரம்பத்தில், நகர நிர்வாகம் இறுதியாக ஒரு வரி கேட்பு ரசீதினை அனுப்புவார்கள். இதில்

செப்டம்பர் 23, அக்டோபர் 21 மற்றும் நவம்பர் 18 ஆகிய தேதிகள் தவணை தேதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல் Duggal
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca